LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III
## 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

## GEOS 4102 பிரதேச திட்டமிடலும் அபிவிருத்தியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

---

01. (i) பிரதேச அபிவிருத்திக் கற்கையின் முக்கியத்துவம் யாது?
(05 புள்ளிகள்)

(ii) நாடுகளிடையே பிரதேசத்திற்குப் பிரதேசம் அபிவிருத்தியில் சமமின்மை காணப்படுவதற்குப் பொறுப்பாயமைந்த காரணிகளை அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை உதாரணங்காட்டி விளக்குக.
(20 புள்ளிகள்)

02. ஒரு பிரதேசத்தினைத் திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கு வளர்ச்சிமுனைக் கோட்பாடு எந்தளவு பயனுள்ளது என்பதைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
(25 புள்ளிகள்)

03. பிரதேச அபிவிருத்தித் திட்டமிடல் செய்முறை தொடர்பாக பின்வரும் விடயங்களைக் குறித்த உதாரணங்கள் தந்து விளக்குக.

(i) மூலவளங்களை அடையாளங்காணுதல் (08 புள்ளிகள்)

(ii) திட்டத்தினை வடிவமைத்தல் (08 புள்ளிகள்)

(iii) திட்டத்தினைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்
(09 புள்ளிகள்)

04. பிரதேச அபிவிருத்தித் திட்டமிடல் என்பது பல பிரச்சினைகளின் மத்தியில் வடிவமைக்கப்படுகின்ற ஒரு செயற்பாடாகும்.

(அ) பிரதேச அபிவிருத்தித் திட்டமிடற் செயற்பாடு ஒன்றில் எதிர் நோக்கப்படும் பொதுப் பிரச்சினைகளை உதாரணங்கள் தந்து ஆராய்க.
(12 புள்ளிகள்)

(ஆ) 'விவசாயம் பல துறைகளை இணைத்து செயற்படும் ஒரு துறையாக இருப்பதனால், பிரதேசம் சார்ந்த விவசாயத் திட்டமிடற் செயற்பாடுகள், பிரச்சினைகள் பலவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.' இலங்கையினைச் சிறப்பு உதாரணமாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.
(13 புள்ளிகள்)

05. இலங்கையின் பிரதேச ரீதியான திட்டமிடல் முயற்சிகள் எதிர்பார்த்த இலக்குகளை முழுமையாக அடையப்பெறாமல் சில பின்னடைவுகளைச் சந்திப்பதற்குப் பொறுப்பான காரணிகளை நுணுகி ஆராய்க.
(25 புள்ளிகள்)

06. எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புரை தருக.
(i) குறைவிருத்தியின் பிரதான பண்புகள்
(ii) இடம்சார் அபிவிருத்தியின் முக்கியத்துவம்
(iii) செயற்திட்ட முன்மொழிவில் உள்ளடக்க வேண்டிய அம்சங்கள்
(12 ½ x 2 = 25 புள்ளிகள்)

*********